<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : MC 9/2025**

**Prosecution witness : ம.சா.1** **Date : 16.02.2026.**

| **Name : நித்யா** | **Caste :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**குறுக்கு விசாரணை**

1) என் பெற்றோர் வீடும், என் வீடும் அருகருகே உள்ளது என்றால் ஆமாம். விரும்பி திருமணம் செய்தோம் என்றால் ஆமாம். கூட்டுக்குடும்பமாக இருந்ததாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் கூட்டுக்குடும்பமாக எப்போதும் வாழ்ந்ததில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரும் நானும் திருமணத்திற்கு முன்பே உறவினர் என்றால் ஆமாம். எதிர்மனுதாரரின் தாயார், சகோதரிகள் என்னிடம் எப்போதும் பிரச்சனை செய்ததில்லை என்றால் சரியல்ல.

2) நான் தான் எதிர்மனுதாரர்களிடம் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் நினைவில்லை. நான் கொடுத்த புகார் மனுவின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தாக்கல் செய்த ஆவணத்தில் என் பெற்றோர் மற்றும் எதிர்மனுதாரர் பெற்றோர் பிரச்சனை செய்ய மாட்டோம் என்று எழுதி கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம்.

3) நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றும் உண்மை தன்மை இல்லாத காரணத்தால் சேர்ந்து வாழ அறிவுறுத்தி இந்த மனுவின் மீது காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் நாத்தனாரிடம் தகராறு செய்து கொண்டு தான்தோன்றிதனமாக என் தாயார்

வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் என்னை கொடுமைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

4) கொடுமைப்படுத்தியிருந்தால் போலீசார் பஞ்சாயத்து செய்து நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எனக்கு தான் போலீசார் அறிவுரை செய்து வாழ சொன்னார்கள் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என் கணவர் அடித்ததாக ஓமலூர் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் சேர்ந்ததற்கான மருத்துவ ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என்னை பாதியில் என் கணவர் அழைத்து கொண்டு வந்துவிட்டார். அதனால் மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலவில்லை. மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலீசார் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை.

5) என் குழந்தை என் கணவர் கொடுமையால் இறந்து பிறந்தது என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் கவனமாக இல்லாததால் தான் குழந்தை இறந்து பிறந்தது என்றால் சரியல்ல. என் கணவர் கவனமாக இருக்கும்படி அறிவுரை சொல்லியதை கேட்காமல் நான் நடந்து கொண்டேன் என்றால் சரியல்ல. அறிவுரை சொல்லியதால் தான் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சரிதான். மீண்டும் சேர்ந்து வாழ்ந்த போது மீண்டும் கருவுற்றேன் என்றால் சரிதான்.

6) என் கணவர் குடித்துவிட்டு என்னிடம் தகராறு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தான் சரியாக என்னை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என்னிடம் சலிப்பு கொண்டு அவர் வாழ்ந்தார் என்றால் சரியல்ல. மீண்டும் என் கணவர் மீது மேச்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். சி.எஸ்.ஆர் மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

7) மேச்சேரி போலீசார் எழுதி வாங்கிய நகலை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வேண்டுமென்றே எதிர்மனுதாரரை பழிவாங்கி நான் தவறு

செய்துவிட்டு எதிர்மனுதாரர் மீது புகார் அளித்தேன் என்றும் அதனால் தான் என் புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 09.06.2018 ம் தேதி சேலம் அரசு மருத்துவமனையில் எனக்கு பெண் குழந்தை பிறந்தது என்றால் ஆமாம். என் அம்மா தான் என்னை பராமரித்தார் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர்கள் தான் பராமரித்து அனைத்து செலவுகளையும் செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குடித்துவிட்டு எந்த காலத்திலும் தகராறு செய்யவில்லை என்றால் சரியல்ல.

8) 2018 ஜீன் மாதம் என்னை அடித்தது சம்மந்தமாக ஓமலூர் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ஊர் பெரியவர்கள் சமரசம் பேசினார்கள் என்றும் நான் என் அம்மாவுடன் சேர்ந்து பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன்.கடந்த 2025 வருடம் ஜீன் மாதம் முதலமைச்சர் தனிப்பிரிவில் புகார் கொடுத்தேன். என்னை விசாரித்து நீதிமன்றம் சென்று பார்த்து கொள்ளுமாறு சொன்னார்கள். 2018 லிருந்து நான், என் தாயார், என் குழந்தை தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றால் ஆமாம்.

9) 1 1/2 ஏக்கர் நிலம் பூர்வீகமாக உள்ளது என்றால் ஆமாம். 1 ஏக்கர் மேட்டு நிலம் உள்ளது என்றால் ஆமாம். போர் போட்டு விவசாயம் செய்து அதன் மூலம் எதிர்மனுதாரருக்கு வருமானம் வருகிறது. தனியாக எதிர்மனுதாரருக்கு பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் விபத்து ஏற்பட்டு காலில் காயம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

10) சரியாக எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றும் கிடைக்கும் கூலி வேலைக்கு சென்று பிழைப்பு நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. பெயிண்டிங் காண்ட்ரேக்ட் எடுத்து தொழில் செய்கிறார். நான் மற்றும் என் தாயார் வேலைக்கு சென்று சம்பாதித்து வருகிறேன் என்றால் இல்லை. நான் ஆதவன் சில்க்ஸ் துணிக்கடையில் துப்புறவு வேலை செய்து வருகிறேன். என் தாயார் வீட்டிலிருந்து வருகிறார். என் அம்மாவுக்கு 1 ஏக்கரில் வீடு உள்ளது. எந்த ஒரு

காரணமும் இன்றி பிரிந்து வாழ்வதால் எனக்கு குழந்தையை பராமரிக்க வசதி வாய்ப்பு உள்ள நிலையில் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் தர வேண்டியதில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.17 11:06:15 +0530